## சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகள் அபிவிருத்தி வசதி செயற்திட்டம் -2012

---

### 1. அபிப்பிராயம்

எனது பரிசீலனையிலிருந்து தென்படுவதும் சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களின் விளைவுகளைத் தவிர,

(அ) 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைச் செயற்திட்டம் பேணியுள்ளதெனவும் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கமைய, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையினை விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது விசேட (டொலர்) கணக்கிலிருந்து பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டம் பேணியுள்ள ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்களானவை (எஸ்ஓஈஎஸ்) கடன் உடன்படிக்கையில் விதந்துரைத்த வேண்டுதல்களின் படி மீள் நிரப்பலிற்கான விண்ணப்பங்களை ஆதாரப்படுத்தவதற்கு நியாயமாக நம்பிக்கை வைக்கக்கூடியதாக இருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவம் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடு உடன்பாடு ஏற்பட்டுள்ளன என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 1,551,325,620 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,415,808,941 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், 2011 ஆம் ஆண்டிற்கான செலவினம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பைப் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2012 | 2011 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 415,616 | 14,954,748 | 15,407,758 |
| பங்குபற்றும் நிதிசார் நிறுவனங்களின் நிதியம் | 1,521,446,408 | 818,461,340 | 2,339,907,748 |
| செயற்பாட்டுச் செலவினம் | 11,929,939 | 22,094,564 | 39,166,294 |
| பங்குபற்றும் நிறுவனங்களுக்கான பயிற்சியும் அபிவிருத்தியும் | 17,533,657 | 3,793,484 | 21,327,141 |
| | 1,551,325,620 | 859,304,136 | 2,415,808,941 |

### 2.2 விசேட (டொலர்) கணக்கு

செயற்திட்டம் பேணிய புத்தகங்களும் பதிவேடுகளும் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கும் அமைய, 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விசேட(டொலர்) கணக்கினது செயற்பாட்டின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | அமெரிக்க டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 22,219,700 | 2,530,852,743 |
| **கூட்டுக** | | |
| நாணயமாற்று இலாபம் | -- | 308,578,840 |
| | 22,219,700 | 2,839,431,583 |
| **கழி** | | |
| பற்றுதல்கள் | (11,992,873) | (1,538,980,065) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 10,226,827 | 1,300,451,518 |
| | ========== | =========== |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

உயர்தரத்தையும் நியமங்களையும் கொண்ட சேவையை பெறுமுகமாக பொருத்தமான நபர் ஒருவர் ஆலோசனையாளராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் நேர்முகப் பரீட்சையில் 87 சதவீதப் புள்ளிகளைப் பெற்றவர் ஆட்சேர்க்கப்படவில்லை. இலங்கையின் (2007 ஆகஸ்ட்) தேசிய கொள்வனவு முகவராண்மை வழிகாட்டியின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆலோசனையாளர்களை தெரிவு செய்து பணியில் அமர்த்துவது தொடர்பான செயற்திட்டத்திற்கு எல்லா வகையிலும் பொருத்தமானவர் என ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும், அரச சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப வேண்டப்படும் பணிக்கொடையைச் செலுத்த முடியாது போகலாம் என்ற பிழையான விளக்கத்தினை

வழங்கி அவரை நிராகரித்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படாத 60 வயதைக் கடந்த நபர் ஒருவர் ஆலோசகராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

## 3.2 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கடன் கொடுப்பனவு

பங்குபற்றும் நிதி நிறுவனங்களுக்கென அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் மற்றும் செயற்திட்டம் சமர்ப்பித்த முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை என்பவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பங்குபற்றும் நிதி நிறுவனத்தின் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்த கடன் தொகை | அங்கீகரிக்கப்பட்ட கடனின் சதவீதமாக கொடுப்பனவு செய்த கடன் |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| இலங்கை வங்கி | 492.75 | 336.66 | 68 |
| மக்கள் வங்கி | 314.44 | 247.37 | 79 |
| வர்த்தக வங்கி | *479.56* | 322.57 | 67 |
| டீஎப்சீசீ வங்கி | 365.90 | 353.20 | 97 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 347.30 | 220.19 | 63 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 261.85 | 168.69 | 64 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 353.97 | 312.23 | 88 |
| சம்பத் வங்கி | 415.70 | 379.00 | 91 |
| | 3,031.47 | 2,339.91 | 77 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மேற்கூறப்பட்ட விபரங்களின் பிரகாரம் தேசிய அபிவிருத்தி வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பவற்றினால் கடன் வழங்கும் முன்னேற்றத்தை ஏனைய வங்கிகளுடன் ஒப்பீடு செய்த போது முறையே 63 சதவீதம், 64 சதவீதம், 67 சதவீதம் மற்றும் 68 சதவீதங்களாக குறைந்த மட்டத்தில் இருந்தது.

(ii) சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு கடனை விடுவிக்கும் போதும் கடனைப் பெறுகின்ற போதும் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

i. மீள்நிதியளிப்பு செயற்பாடுகளுக்காக வங்கிகளில் தாமதங்கள் காணப்பட்டன.

ii. கடனைப் பயன்படுத்துதல் தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு போதியளவான வழிகாட்டல் அல்லது பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை.

iii. சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு கடன் வழங்கும் போது தாமதம் நிலவியமையினால் சில பிரேரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தது.

iv. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் வங்கியினால் கடன் வழங்குதலை இரத்து செய்தல் மற்றும் தொழல் முயற்சிகளுக்காக 2012 ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் கடன் அங்கீகாரம் வழங்கப்பட்டமை

v. சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள் பொருத்தமான மதிப்பீட்டிற்கு உட்படுத்தி வியாபாரத் தேவைகளை இனங்கண்டு கடன்தொகை அங்கீகரிக்கப்படாமையினால் கடன்பணத்தை விடுவிப்பதற்கு முடியாமை.

(iii) கடன் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் கடன் பணத்தின் ஆரம்ப தவணைப் பணத்தை 06 மாத காலத்தில் விடுவிப்பதற்கு உரிய தரப்பினரினால் உடன்பாட்டிற்கு வந்தபோதும் அந்தக் காலத்தையும் விஞ்சி 10 மாதங்கள் கடந்திருந்தும் இரண்டு சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு ரூபா 26.5 மில்லியன் கடன்பணம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயிற்சி**

பங்குபற்றும் நிதி நிறுவனங்களதும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளதும் திறனை வலுப்படுத்துவதற்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்படுவதற்காக பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் செயற்திட்டத்தின் பிரதான நோக்கத்தில் ஒன்றாக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் | | | சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர் | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | ஒரு உத்தியோகத்தருக்கான கிரயம் | மொத்தச் செலவு | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | ஒரு முயற்சியாளாருக்கான கிரயம | மொத்தச் செலவு |
| | | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி | 563 | 4,848 | 2,729,189 | 1,167 | 1,450 | 1,692,520 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 570 | 1,285 | 732,491 | - | - | - |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 583 | 11,216 | 6,538,812 | 788 | 754 | 594,375 |
| இலங்கை வங்கி | 2,015 | 1,064 | 2,145,690 | 1,430 | 1,601 | 2,289,640 |
| வர்த்தக வங்கி | 152 | 1,373 | 208,711 | 644 | 388 | 250,077 |
| ஹற்றன் நஷனல் வங்கி | 33 | 14,848 | 489,984 | 53 | 3,181 | 168,591 |
| மக்கள் வங்கி | 204 | 12,064 | 2,461,037 | 425 | 1,072 | 455,503 |
| சம்பத் வங்கி | 60 | 9,509 | 570,530 | - | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | 4,180 | 15,876,444 | 4,507 | 5,450,706 |
| | ======= | ======== | ======= | ======== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளிற்கு நிதியளிப்பு ஏற்பாடு தொடர்பில் பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் அவ்வாறான நிதி ஈடுபடுத்தல்களின் வினைத்திறனான பயன்பாடு மற்றும் தொடர்புகள் அவ்வாறான முயற்சிகளில் இயலுமையை அதிகரிப்பதற்காக ரூபா 787 மில்லியன் தொகை உலக வங்கியினால் வழங்குவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் பங்குபற்றும் நிதி நிறுனங்கள் ரூபா 427 மில்லியன் மாத்திரம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தன. அதில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 21 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அது உடன்பட்ட தொகையில் 5% ஐ பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு அதிகூடிய தொகையை சம்பத் வங்கியினால் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அதாவது ரூபா 379 மில்லியன் தொகை சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்காக வழங்கப்பட்டிருந்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. சம்பத் வங்கியின் உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி வழங்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய பங்குபற்றும் நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடுகின்ற போது குறைவான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களுக்கே பயிற்சியளிக்கப்பட்டிருந்தது.

(iii) பிரதேச அபிவிருத்தி வங்கியினால் அதன் 570 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பன தமது நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு முறையே 53 மற்றும் 425 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய பங்குபற்றும் நிறுவனங்களுடன் ஒப்பிடுகின்ற போது அது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(v) பங்குபற்றும் நிதி நிறுவனங்களுக்கிடையே ஒரு வங்கி உத்தியோகத்தரை பயிற்றுவிப்பதற்காக ஏற்பட்ட ஆகக் குறைந்த கிரயம் இலங்கை வங்கியினால் செய்யப்பட்டிருந்ததுடன் அது ரூபா 1,064 ஆக இருந்தது. ஆகக் கூடிய கிரயம் ரூபா

14,848 ஆக இருந்ததுடன் அது ஹற்றன் நஷனல் வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒரு சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளரை பயிற்றுவிப்பதற்கான ஆகக் குறைந்த கிரயம் ரூபா 388 தொகையாக இருந்ததுடன் அது வர்த்தக வங்கியினால் செய்யப்பட்டிருந்தது. ரூபா 3.181, தொகையான ஆகக் கூடிய கிரயம் ஹற்றன் நஷனல் வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் பயிற்சியளிப்பதில் ஏற்பட்ட கிரயத்தில் பாரியளவிலான முரண்கள் காணப்படுகின்றமையானது பயிற்சிகளில் நியமங்கள் மற்றும் திட்டமிடல் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) கடன் பகிர்ந்தளித்தல்**

தீவினுள் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை இனங்கண்டு கடன் வசதிகளை வழங்குவது செயற்திட்டத்தின் நோக்கத்தில் ஒன்றாக இருந்த போதிலும் கொழும்பு, கம்பஹா மற்றும் குருணாகல் மாவட்டங்களுக்கு அதிக கடன்தொகை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. அம்பாறை, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மொனராகலை, நுவரெலியா, திருகோணமலை, வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்தொகையின் பெறுமதியை மொத்தக் கடனின் சதவீதமாகக் கொள்ளும்போது 0.02 சதவீதத்திற்கும் 1.54 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. எனவே இந்த கடன் உத்தேசத் திட்டம் தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை அறிமுகப்படுத்தி வாடிக்கையாளர்களை தெரிவு செய்யும் நடைமுறை உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாது நீண்ட காலமாகக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டுள்ள நம்பிக்கையான வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் இக் கடன்பணம் வழங்கப்பட்டமையினால் நலன்கள் சகல மாவட்டங்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) ஆபத்தினைப் பகிர்ந்தளிக்கும் வசதிகளை உருவாக்குதல்**

சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் தொடர்பாக வணிக வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய நட்டங்களின் ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்காக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் உடன்படிக்கை கைச்சாத்திடல்கள் செயற்திட்டத்தின் கடன் விடுவிக்கும் நடைமுறைகளுடன் சேர்த்து செய்யப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் விடுவிக்கப்பட்ட கடனுக்காக ஆபத்தினைப் பகிர்ந்தளிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. தற்போது இந்த உடன்படிக்கை சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்கும் நிலையில்

காணப்படுகின்றமையினால் செயற்திட்டத்தின் நோக்கமான பாதக விளைவுகளைப் பகிர்ந்தளிக்கும் வசதிகளின் மூலம் வணிக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு கடன் வழங்கும் செயற்பாட்டை அதிகரிப்பதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(உ) சிறிய மற்றும் நடுத்தர முயற்சிக் கடன் பயன்பாட்டின் முன்னேற்றம்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடன் பயன்பாட்டின் செயல் முன்னேற்றத்தில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கடன் பயன்பாட்டினால் சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளில் இலாபத்தன்மை அடையப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் வங்கியினால் எடுக்கப்பட வேண்டியிருந்தது. கடன் வழங்கப்பட்ட 29 சந்தர்ப்பங்களில் வங்கியினால் அவ்வாறான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படாத 08 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக கடன் வழங்கலின் மூலம் சமூக மற்றும் பொருளாதார நலன்களும் விரிவாக்கப்பட்டிருந்தனவா என்று.

(ii) சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களினால் பெறப்பட்ட கடன் பணத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணைகள் சரியாகத் திட்டமிடப்பட்ட பிரேரணைகளாகக் காணப்படாமையினால் கடன் இரத்து செய்தல்கள் அவதானிக்கப்பட்டது. உரிய வங்கிகளுக்கு சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களினால் சமர்ப்பித்த செயற்திட்ட பிரேரணைகள் உரிய மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டு தொழில் முயற்சித் தேவைகள் இனங்காணப்பட்டு கடன் அங்கீகரிக்கப்பட்டிருக்குமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கமாட்டாது. அவ்வாறான 02 சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றது.

* மிளகாய் அரைக்கும் ஆலைக்காக ரூபா 4.3 மில்லியன் தொகையான தொழிற்படு மூலதனத் தேவைக்காகவும் ரூபா 0.7 மில்லியன் தொகையான கைத்தொழிலின் முதலீட்டிற்காகவும் ரொகண்டிருந்த ரூபா 5 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் கைத்தொழிலின் முதலீட்டிற்காக ரூபா 4.3 மில்லியன் மற்றும் ரூபா 0.7 தொகையான தொழிற்படு மூலதனத்

தேவைக்காகவும் மாற்றப்பட்டு கடன் பெறுபவரினால் கடன் பணம் கோரப்பட்டிருந்து. அதனால் அங்கீகரிக்கப்பட்ட தொகையிலிருந்து ரூபா 0.7 மில்லியன் மாத்திரம் நிதியளிக்கப்பட்டு ரூபா 4.3 மில்லியன் தொகையான நிதியளிப்புக்கள் இரத்து செய்யப்பட்டிருந்தது.

* கைப்பணிக் கைத்தொழிற்சாலைக்காக ரூபா 2 மில்லியன் தொகையான தொழிற்படு மூலதனத் தேவைக்காகவும் ரூபா 13 மில்லியன் தொகையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காகவும் ரூபா 15 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் தொழிற்படு மூலதனத் தேவைக்காக ரூபா 2 மில்லியன் தொகையும் ஒரு இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3 மில்லியன் தொகையும் ஆக ரூபா 5 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. கைத்தொழில் உரிமையாளரினால் அவர்களிடமுள்ள பணத்தைச் செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர சூத்திரத்திற்காக எஞ்சிய கடனையும் விடுவிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அது வரையிலும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களுக்கான ரூபா 10 மில்லியன் வழங்குதலும் இரத்து செய்யப்பட்டிருந்தது.

2012 சனவரி 20 ஆந் திகதி ரூபா 3.5 மில்லியன் செலவில் பொருத்தப்பட்ட இயந்திரமும் 2013 மார்ச் 19 ஆந் திகதி வரையிலும் செயற்படு நிலையில் காணப்படவில்லை.

(iii) இந்த கடன் திட்டத்தின் மூலம் அடைந்து கொள்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட நலன்களுக்கிடையே சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளில் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் போது தொழில்வாய்ப்புச் சந்தர்ப்பங்களை அதிகரித்தல் அடையப்பட வேண்டும். இருந்த போதிலும் 04 செயற்திட்டங்களில் பதவியணியினரை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) களப் பரிசோதனை அறிக்கைகளில் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்பணம் சம்பந்தப்பட்ட நோக்கங்களிற்கு ஈடுபடுத்தப்படாத உள்ளபடியான 3 சந்தர்ப்பங்களில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. இதனிடையே இரண்டு சந்தர்ப்பங்களில் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் உள்ளவாறாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தின் போது 10 ஊழியர்களிற்குப் பதிலாக 15 ஊழியர்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(v) தளபாட தொழிற்சாலைக்கு இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக ரூபா 0.43 மில்லியனும் தொழிற்படு மூலதனத் தேவைக்காக ரூபா 9.5 மில்லியன் தொகையும் உள்ளடக்கிய ரூபா 10 மில்லியன் கடன்தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் தொழிற்படு மூலதனத் தேவைக்காக பெறப்பட்ட கடன்பணம் அதற்காக ஈடுபடுத்தப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மக்கள் வங்கிக் கிளையின் மூலமும் அது உறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை.

(vi) இறப்பர் பதனிடும் கைத்தொழிற்சாலைக்காக ரூபா 10 மில்லியன் கடன்தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த தொகையில் கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.24 மில்லியன் தொகை கட்டம் கட்டமாக விடுவிக்கப்படாமல் 2013 சனவரி 13 ஆந் திகதி மொத்தப் பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2013 மார்ச் 18 ஆந் திகதி வரையிலும் அந்தக் கட்டிட நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட கடன்தொகையின் பிரகாரம் ரூபா 1.36 மில்லியன் பெறுமதியான ட்ரெக் வாகனம் கொள்வனவு செய்யவேண்டியிருந்த போதிலும் அவ்வாகனம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(vii) உரிய இலங்கை வங்கிக் கிளையின் மூலம் தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாது ஆடைக் கைத்தொழிற்சாலைக்கு உபயோகிக்கப்பட்ட இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் போது 14 ஜுகி தையல் இயந்திரங்கள் மற்றும் 03 ஓவலொக் தையல் இயந்திரங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 10 ஊழியர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையினால் சில தையல் இயந்திரங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(viii) சுற்றுலா விடுதியொன்றை ஆரம்பிப்பதற்காக ரூபா 10 மில்லியன் கடன்தொகை உத்தேச செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 மார்ச் 22 ஆந் திகதி வரையிலும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தொழில் முயற்சி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாக குறிப்புகள் எதுவும் இல்லை. அதனால் இந்த கடன்தொகை வழங்குதலானது செயற்திட்டத்தின் நோக்கத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளருக்கு ஊக்குவிப்பு வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ix) புதிய கைத்தொழிலை உருவாக்குவதற்காக கடன் வழங்குதல்

செயற்திட்டத்தின் நோக்கமான உலகப் பொருளாதார வீழ்ச்சியினைக் காரணமாகக் கொண்டு பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை கட்டியெழுப்புவதாக இருந்த போதிலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 237.15 மில்லியன் கடன் விடுவிக்கப்பட்டிருந்தது. ரூபா 10 மில்லியனை விட அதிகமாகக் கடன் வழங்கும் போது உடன்படிக்கை பட்டோலையின் 2 இல் ஈ (பீ) இலுள்ள நிபந்தனையின் பிரகாரம் கடன் வழங்கப்படும் புதிய முயற்சிகளின் பொருத்தத் தன்மையினை பரீட்சிக்க முடியாதிருந்தது.

**(ஊ) செயற்திட்ட முகாமைத்துவக் கூறின் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இந்த செயற்திட்டத்தின் முகாமைத்துவக் கூறு, காட்சியறை நிதியியல் பெறுவனவு செயற்திட்டத்தின் செயற்பாடுகளிலும் உதவவேண்டியிருந்தது போதிலும் செயற்திட்ட உடன்படிக்கை 2012 யூலை 17 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டு 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 300 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக இவ்வருடத்தின் போது எந்தச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்ட செயற்பாட்டுக் கூறினால் 17 சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களில் களப் பரிசோதனை மேற்கொண்டு வழங்கப்பட்ட நிதி முதலீட்டின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் உள்ளடக்கிய 03 கைத்தொழில்களின் குறைபாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை மூலங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.